<u>சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி.</u>

<u>OS NO. 231/2024 (வாசா.1 – மதன்மோகன்) தேதி: 30.01.2026</u>

<u>வாசா1 மீண்டும் ஆஜர். சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு 2 முதல் 4, 7,8,16,32,40,41,43,64 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :</u>

நான் புதுக்கிராமத்தில் டீக்கடை நடத்தி வருகிறேன். நான் சங்கத்திற்கு மகமை வரி செலுத்துகிறேனா என்றால் இல்லை. ஆனால் சங்கத்திற்கு தலைகட்டு வரி, சந்தா செலுத்துகிறேன். கோவில்பட்டி நாடார் உறவின் முறை சங்கத்திற்கு 2022 ற்கு முன்பாக எந்த வருடம் தேர்தல் நடந்தது என்றால் எனக்கு தெரியாது. 2022 ற்கு முன்பு உள்ள சங்க நிர்வாகிகளின் பதவிக்காலம் எந்த வருடம் முடிவடைந்தது என்றால் எனக்கு தெரியாது. சங்கத்தின் துணை விதிகளின் அசல் உறவின் முறை சங்கத்தில் மட்டுமே இருக்கும் என்றால் சரிதான். ஆனால் சங்கத்தில் உறுப்பினர்கள் யார் வேண்டுமானலும் துணை விதிகளுக்கு சீல் வைத்து நகல் வாங்கி கொள்ளலாம். அந்த துணை விதிகளின் நகல் மட்டுமே சங்கத்தில் இருந்து வாங்க முடியும் என்றாலும் அசல் வாங்க முடியாது என்றாலும் அந்த விதிகளின் நகல் எடுத்து செயலாளர் கையொப்பம் செய்து முத்திரை வைத்து வழங்கப்படும். நான் தாக்கல் செய்த வா.சா.ஆ.5 ஆவணம் அசல் என்றால் அது அசல் இல்லை. செயலாளரால் கையொப்பம் செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. எனது முதல் விசாரணையில் மேற்படி ஆவணம் அசல் என்றுதான் குறிப்பிட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ. 5 ஆவணம் எனது தாய்மாமா என்னிடம் கொடுத்தார். நான் சங்கத்தில் மனு எதுவும் கொடுத்து மேற்படி ஆவணத்தை வாங்கவில்லை. வா.சா.ஆ. 5ல் உள்ள செயலாளரின் கையொப்பம் யாருடையது என்றால் எனக்கு தெரியாது. என் தாய்மாமாவிடம் தான்

கேட்க வேண்டும். உறவின் முறை சங்கத்தில் தற்பொழுது எத்தனை நிர்வாக குழு உறுப்பினர்கள் உள்ளார்கள் என்றால் தற்பொழுது 65 பேர் உள்ளார்கள். வா.சா.ஆ.5 ல் தலைவர், துணை தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் 46 உறுப்பினர்களை கொண்டது என குறிப்பிடப்பட்டுள்ளது ஏன்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

**<u>குறுக்குவிசாரணைதொடர்ச்சி:</u>** 2 முதல் 4, 7,8,16,32,40,41,43,64 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

(ஒம்) D. மாரிக்காளை, B.Sc.,M.L.,
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.